මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක 02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இல: **PRE/2024/14** **2024.08.05**

# சனாதிபதித் தேர்தல் - 2024.09.21

## அஞ்சல் வாக்கு விண்ணப்பித்தல்

**அஞ்சல்மூலம் வாக்களிக்க எதிர்பார்க்கும், அதற்குத் தகுதிபெற்ற அரச அலுவலர்கள்/ பாதுகாப்புப் பிரிவு அலுவலர்களுக்கும் அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கும் விடுக்கப்படும் அறிவித்தல்**

2024 ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணியுடன் முடிவடையவிருந்த சனாதிபதித் தேர்தலுக்கான அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான திகதி, அஞ்சலிடும்போது ஏற்படக்கூடிய காலதாமதங்களையும் ஆணைக்குழுவுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைகளையும் கவனத்திலெடுத்து **2024 ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) நள்ளிரவு 12.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.** அதன்படி, விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அதாவது, **2024 ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி** நள்ளிரவு 12.00 மணிக்கு முன்னர், அவை உரிய மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களை வந்தடைய வேண்டும்.

**விண்ணப்பங்கள் கிடைக்கும்போது ஏற்படக்கூடிய காலதாமதங்களைத் தவிர்க்குமுகமாக 2024 ஆகஸ்ட் மாதம் 08, 09 ஆகிய இரு தினங்களிலும், பூரணப்படுத்திய அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை அஞ்சலுக்கு ஒப்படைப்பதைத் தவிர்த்து, ஒவ்வொரு மாவட்ட வாரியாக அவற்றை வேறு பிரித்து, வெவ்வேறு உறைகளில் இட்டு, அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் அலுவலகம் அமைந்துள்ள மாவட்டத்தின் மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்கு வந்து நேரில் ஒப்படைக்க நடவடிக்கை எடுப்பது மிகவும் உகந்தது என்பதை அறிவிக்கின்றேன்.**

இத்திகதி எக்காரணங்கொண்டும் இனிமேல் நீடிக்கப்பட மாட்டாது என்பதையும் தயவுடன் கவனத்திற்கொள்ளவும்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்